கான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்கு மான நடவடிக்கைமுறை என்பன உட்பட, பகிரங்க அலுவலர்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(5) 126 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டிருக்கும் நியாயாதிக்கத்துக்கமை வாக, பகிரங்க அலுவலரொருவரின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பில், அமைச்சரவையினால், அமைச்சர் ஒருவரி னால், பகிரங்க சேவை ஆணைக் குழுவினால் அல்லது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஒரு குழுவினால், அல்லது பகிரங்க அலுவல ரொருவரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிவை நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் விசாரணை செய்வதற்கு, அதன்மீது தீர்ப்புக் கூறுவதற்கு அல்லது எம்முறையி லேனும் அதனைக் கேள்விக்குட்படுத்துவதற்குத் தத்துவமோ நியாயாதிக்கமோ கொண்டிருத்தலாகாது.

(6) இந்த உறுப்புரையின் நோக்கங்களுக்காகவும் 56 தொடங்கி 59 வரையிலான உறுப்புரைகளின் நோக்கங்களுக்காகவும் (இரண்டு முட்பட) "பகிரங்க அலுவலர்" என்பது தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரை உள்ளடக்காது.

56. (1) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து ஆட்களுக்குக் குறையாதவர்களைக் கொண்ட பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருக்கும். ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரைச் சனாதி பதி, தவிசாளராகப் பெயர் குறித்து நியமிப்பார். பகிரங்க சேவை ஆணைக்குழு.

(2) ஆளெவரும், அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப் பின், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப் படுதலோ அல்லது தொடர்ந்திருத்தலோவாகாது.

(3) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப் படுவதன் நேர்முன்னர், பகிரங்க அலுவலராக இருந்த அல்லது நீதித்துறை அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்த கைய நியமனம் செயலுறத் தொடங்கியதும் அத்தகைய பதவியை வகியாதொழிதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலரா கவோ அல்லது நீதித்துறை அலுவலராகவோ மீளவும் நிய மிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய எவரேனும் ஆள், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இல்லா தொழிகின்றவரைக்கும், அல்லது அத்தகைய ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருக்கின்றபோது, விடயத்துக்கேற்ப அவர் ஒரு பகிரங்க அலுவலராக அல்லது நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின் எந்த வயதில் ஓய்வுபெறும்படி பணிக்கப்படுவாரோ அந்த வயதை எய்தினால், பகிரங்க அலுவலராகவும் அல்லது நீதித்துறை அலு வலராகவும் அரச சேவையில் ஓய்வூதியங்கொண்ட பதவியை

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் குழுக்கள்.

57. (1) அமைச்சரவை அவ்வாறு பணிக்கும்போதெல்லாம், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளர், அத்தகைய பணிப்பிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) இந்த உறுப்புரையின் ஒராம் பந்தியின்கீழ் ஒரு பணிப்பு விடுக்கப்பட்டதன்மேல் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளர், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஒரு குழுவை நியமித்தல் வேண்டும். அத்தகைய தவிசாளர், அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவின் ஓர் உறுப்பினராகவுள்ளவிடத்து, அவரே அக்குழுவின் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இல்லாதவிடத்து, அத்தகைய தவிசாளரால் எழுத்துமூலமாகப் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடியவாறுன அக்குழுவின் அத்தகைய உறுப்பினர், அக்குழுவின் தவிசாளராதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஏதேனும் குழு நியமிக்கப்பட்டதன்மேல் அத்தகைய குழுவை நியமித்த பணிப்பிற் குறித்துரைக்கப்பட்ட வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிவிலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான தத்துவங்களைப் பகிரங்க சேவை ஆணைக்குழு பிரயோகிக்காதொழிதல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல்வேண்டும் ; அவர் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய ஏதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) அத்தகைய ஏதேனும் குழு, அதன் உறுப்பாண்மையில் வெற்றிடம் எதுவும் இருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருந்தமை காரணமாக அல்லது உறுப்பினர் எவரதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தமை காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதன் ஏதேனும் குழுவினால் தத்துவம் கையளிக்கப்படுதல்.

58. (1) பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் ஏதேனும் குழு, ஏதேனும் வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான அதன் தத்துவங்களை அமைச்சரவையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, பகிரங்க அலுவலர் ஒருவருக்குக் கையளிக்கலாம்.

(2) முற்போந்த பந்தியின் கீழ் பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது அதன் ஏதேனும் குழு அதன் தத்துவங்களை எந்தப் பகிரங்க அலுவலருக்குக் கையளித்துள்ளதோ அந்தப் பகிரங்க அலுவலரினால் ஆக்கப்பட்ட இடமாற்றக் கட்டளையினால் அல்லது பதவி விலக்கல் கட்டளையினால் அல்லது ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பி